Arrests on corruption charges.

* 396. Q.—THIRU K. M. RAMASWAMI GOUNDER: Will the Hon. the Chief Minister be pleased to state: the number of persons arrested (i) in Police Service and (ii) in other services, on charges of corruption by the Directorate of Vigilance and Anti-Corruption between 1st January 1967 and 31st October 1967?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதி வரையிலான காலத்தில், காவல்துறையைச் சேர்ந்த 2 அரசாங்கப் பணியாளர்களும், ஏனையத் துறைகளைச் சேர்ந்த 16 பேரும் கைது செய்யப்பட்டனர்.

THIRU T. MARTIN: May I request the Hon. Chief Minister to state whether the Directorate of Vigilance and Anti-Corruption have their sub-offices in all the District Centres of the State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த விவரங்கள் இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, சில உண்மையான வழக்குகள் கூட நீதிமன்றத்திலே தோல்வி அடைந்து விடுகின்றன. எனவே, லஞ்ச ஊழல் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் அதிகாரிகளுக்கே நீதி வழங்கும் அதிகாரத்தை அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 'உண்மையான வழக்குகள் நீதி மன்றத்திலே தோல்வி அடைகின்றன' என்பதை நான் இப்பொழுது ஒத்துக்கொள்வதாக இல்லை. வழக்கு உண்மையானதாக இருக்குமானால் நீதிபதி உண்மையான தீர்ப்புதான் அளிப்பார்.

திரு. ஆ. கு. சுப்பையா : 16 பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டு கைது செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அவர்களில் எத்தனை பேர்கள் நிரபராதிகள் என்று விடுதலை செய்யப்பட்டார்கள் ? எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தப் பதினாறு பேர்களில் குற்ற மற்றவர் என்று விடுதலை செய்யப்பட்டவர் ஒருவர்தான்.

திரு. சு. துரைசாமி : 16 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எந்த எந்த ஊரிலிருந்து இந்தக் குற்றங்களைச் செய்திருக்கிறார்கள் என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முன்பே சொன்னேன், அந்த விவரம் இல்லை என்று.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த லஞ்சக் குற்ற வழக்குகளில் பிடிபட்டவர்கள் எவ்வளவு தொகை சம்பந்தப்பட்டிருக் கிறார்கள் ? அதிகப்படியான தொகையா, குறைந்த தொகையா என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த வழக்குகள் பற்றிய விவரங்கள் எல்லாம் இல்லை. எத்தனைபேர் மீது வழக்கு போடப்பட்டது, அந்த வழக்குகள் எந்த நிலையில் இருக்கின்றன என்ற விவரங்கள் மாத்திரம்தான் என்னிடத்தில் இருக்கின்றன.